வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 20.11.2024 புதன்கிழமை இதழ் : 324 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையை கொண்டு செல்வோம்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவிப்பு



முல்லைத்தீவு, நவம்பர் 21

**இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்வதற்குரிய அழுத்தங்களையும் வேறு சர்வ தேச விசாரணையை நடத்தக்கூடிய அரங்குகளுக்கு இலங் கையை கொண்டு செல்வதற்குரிய எங்களுடைய பயணம் இன்னும் தீவிரம் அடையும் என தமிழ் தேசிய மக்கள் முன் னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்**

நேற்று செவ்வாய்க் கிழமை முள்ளிவாய்க்கால் நினைவு தூபிக்கு சென்று மலர்தூவி அஞ்சலி செலுத்தி சத்தியப்பிரமா ணம் மேற்கொண்ட பின் னர் ஊடகங்களுக்கு கருத் துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறி னார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

எதிர்வரும் 5 வருடங் களுக்குள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக் கைகள் தொடர்பாக ஆழ மாக சிந்தித்து தமிழ் தேசத் தின் இன அழிப்பி னுடைய, அடை யாளமாக இருக்கக்

11



## சீன தூதர் பருத்தித்துறைக்கு!

வடமராட்சி, நவ. 21

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான குழுவினர் பருத்தித்துறைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்டனர்.

வடக்கு மாகாணத்துக்கு மேற்கொண்டுள்ள விஜயத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள சீன தூதுவர் நேற்று மதியம் 01.00 மணிக்கு பருத்தித்துறை - சக்கோட்டை முனைக்கு குழுவின ரோடு வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

இதன்போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், வடக்கு கிழக்கில்

11

## கஜேந்திரகுமார் எம்.பி. நேற்றுக் காலை முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம்

முல்லைத்தீவு, நவ. 21

பாராளுமன்ற உறுப்பின ராக மீண்டும் தெரிவாகியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தலைவர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம் முள்ளிவாய்க்காலில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற

11



## ஐ.தே.க. - ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றிணைய விரைவில் பேச்சு

கொழும்பு, நவ. 20

ஐக்கிய தேசியக் கட்சி யையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைப் பதற்குரிய பேச்சுகள் அர சியல் களத்தில் விரைவில் மீள ஆரம்பிக்கப்படவுள் ளன என்று தெரியவரு கின்றது.

ஐ.தே.கவில் இரு இணைத் தலைமைப் பதவிகளை உருவாக்கி ஒன்றை சஜித்துக்கும், மற் றொன்றை ருவான் விஜே வர்தனவுக்கும் வழங்கு வது பற்றி பரிசீலிக்கப் பட்டு வருகின்றது.

எனினும், கட்சியின் அதிஉச்ச தலைவர் பத வியை உருவாக்கி, அதனை ரணில் விக்கிரமசிங்க வுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளதால் இணைவு சாத்தியப்படுமா என்ற சந்தேகமும் எழுந் துள்ளது.

ஆனால் ஐ.தே. கவும், ஐக்கிய மக் கள் சக்தியும்

11

## தமிழர்களின் ஆதரவை பெற்று வரலாற்றில் இடம்பிடித்த அநுர!

உதய கம்மன்பில புகழாரம்

கொழும்பு, நவ. 21

“வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆதரவை முழுமையாகப் பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க மாயாஜால வித்தைக்காரர் என்றே குறிப்பிட வேண்டும். பாராளுமன்றத் தேர்தலில் தமிழர்களின் ஆதரவைப் பெற்று ஜனாதிபதி வரலாற்றில் இடம் பிடித் துள்ளதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண் டும்.”

- இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலை வரும் முன்னாள் பாராளுமன்ற

11

## சபை முதல்வராக பிமல்!

கொழும்பு, நவ. 20

அமைச்சர் பிமல் ரத்நாயக்க, சபை முதல்வராக நிய மிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை கூட் டம் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே இவர் நியமிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)



மன்னாரில் அதிர்ச்சி சம்பவம்

## பிரசவத்தின்போது தாயும், சேயும் பலி!

வைத்தியசாலையின் கவனயீனம் என குற்றச்சாட்டு

மன்னார், நவ. 21

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று பிரசவத்துக்காக கர்ப்பிணித் தாய் ஒருவர் அனுமதிக்கப் பட்ட நிலையில் தாயும் சேயும் மரணமடைந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியை சேர்ந்த 28 வய தான வனஜா என்ற திருமணமாகி 10 வருடங்களே ஆன இளம் தாயே நேற்று மன்னார் வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

11

## சுமந்திரன் முதலமைச்சரா? சிறீதரன் எம்.பி. விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 21

“வடக்கின் முதலமைச்சராக சுமந்திரன் பொருத்த மானவர் - மத்திய குழுவில் கூறிய சிறீதரன்” என்ற தலைப்பில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஈழநாடு முன்பக்கத்தில் வெளியாகிய செய்தியை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் முற்றாக மறுத்துள்ளார். வவுனியாவில் கடந்த ஞாயிறு நடந்த அரசியல் குழுக் கூட் டத்தில் அவ்வாறான கருத்து எதனையும் தான்

11

## சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தவேண்டும்

புதிய நீதி அமைச்சர்

கொழும்பு, நவ. 21

சமூக பொருளாதார ரீதியில் மீட்சியை ஏற்படுத்த வேண்டுமாயின் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரி வித்துள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட் டத்தரணி ஹர்ஷண நாணயக்கார நேற்று தனது கடமை களை பொறுப்பேற்றுக்கொண்டார்.

புதிய அமைச்சரவை அமைச்சர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட நிலையி லேயே அமைச்சர் நேற்று தனது கடமைகளை

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளின் மீது மரங்கள் வீழ்ந்து இரண்டு குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ.20

இயற்கை அனர்த்தத்தினால் யாழ்ப்பாணத்தில் இரண்டு குடும்பங்களை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முக அமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/315 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவரும், ஜே/328 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.





நேற்றைய தினம் இரண்டு குடும்பங்களின் வீட்டின் மீதும் மரங்கள் முறிந்து விழுந்ததால் வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். அமைப்பாளர் காலமானார்

யாழ்ப்பாணம், நவ.20

தொழிலதிபரும் ஐக்கிய மககள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான அழகரத்தினம் கிருபா (வயது 43) நேற்று காலமானார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவர் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளராக போட்டியிட்டார். தேர்தல் பிரசார காலங்களில் திடீர் சுகவீனம் அடைந்த அவர், சுயநினைவற்ற நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.



தொழிலதிபரான அவர் பல வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளையும், வேறு பல உதவிகளையும் வழங்கி அவர்களது குடும்ப வறுமையை போக்கி பல சேவைகளை புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# வல்லையில் இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயம்





யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணம், வல்லை - உப்புவல்லையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது-

யாழில் இருந்து நெல்லியடி நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியும், நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வானும் உப்புவல்லையில் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவரும் வானில் பயணித்த ஒருவரும் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# முஸ்லிம் மக்களின் உணர்வுகளை அநுர அரசு புரிந்துகொள்ளவில்லை

## இம்ரான் மகரூப் எம்.பி. கூறுகிறார்

திருமலை, நவ. 20

இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது செயற்படுவது மிகவும் கவலையைத் தரு கின்றது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றுள்ள இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது-


முஸ்லிம் மக்களும் இந் நாட்டின் பிரஜைகள்.

அந்த வகையில் இந்த சமூகமும் ஏனைய சமூகங்களைப் போன்று கௌரவத்துடன் இந் நாட்டில் வாழ விரும்புகின்றது.

இந்நாட்டின் சுதந்திர காலம் தொட்டு நியமிக்கப்பட்டு வந்த அமைச் சரவையில் முஸ்லிம் மக்களின் பிரதி நிதித்துவம் இருந்து வந்துள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக இந்த அரசாங்கம் நியமித்த அமைச் சரவையில் முஸ்லிம் சமுகத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாடு முழுவதும் உள்ள முஸ்லிம் சமுகம் மிகுந்த கவலை கொண்டுள்ளது. சமுக



வலைத்தளங்களை அவதானிக்கின்றபோது இதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த அரசாங்கத்தின் கடந்த குறுகிய காலச் செயற்பாடுகள் சிலவற்றை பாரக் கும்போது முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இந்த அரசாங்கத்துக்கு இருக்கின்றதோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் அந்த மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட 6 தவிசாளர் பதவிகளில் எந்தவொரு முஸ்லிம் தவிசாளரும் நியமிக்கப்படவில்லை.

இந்த விடயம் பேசுபொருளான பின்னர் ஒரு முஸ்லிம் தவிசாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல இந்த அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற 18 தேசியப்பட்டியல் ஆசனங்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் முன்னர் வெளியிடப்பட்ட போது எந்தவொரு முஸ்லிம் உறுப்பினரதும் பெயர் வெளிவரவில்லை.

பின்னர் இதுவும் பேசுபொருளான பின்னர் ஒரு முஸ்லிம் உறுப்பினரது பெய ரோடு புதிய பட்டியல் வெளியானது.

அந்த வரிசையிலேயே இப்போது இந்த அரசாங்கம் நியமித்துள்ள அமைச் சரவையில் இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டுள்ளது - என்றார். (அ)

# வவுனியா இ. போ. ச. சாலையில் 18 கிலோ கிறீஸ் வாளி திருட்டு!

வவுனியா, நவ. 20

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலையிலிருந்து 18 கிலோ நிறையுடைய கிறீஸ் வாளி திருடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த திருட்டுச்சம்வம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ)


# உர மானியம் வைப்பிலிடுவதில் தாமதம்

கொழும்பு, நவ. 20

கணினி அமைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக, உர மானிய நிதியை, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக, விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய, அதிகாரிகள் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ள விவசாய அமைச்சு, உர மானிய பணத்தை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளது. (அ)

# 4 கிலோ கேரள கஞ்சாவுடன் மன்னாரில் ஒருவர் கைது!




மன்னார், நவ. 20

கள்ளியக்கட்டைக்காடு பகுதியிலிருந்து மன்னார் தீவுக்குள் கொண்டுவரப்பட்ட கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தள்ளாடி சந்தி அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 04 கிலோ 315 கிராம் கேரள கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் கள்ளியக்கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட நபர் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

# பதுளை நோக்கி சென்ற ரயில் தடம்புரள்வு!

கொழும்பு, நவ. 20

தியத்தலாவை ரயில் நிலையத்தில் ரயில் ஒன்று தடம் புரண்டது.

கண்டியிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயில் ஒன்றே நேற்று பிற்பகல் தடம் புரண்டது.

இதன் காரணமாக மலைநாட்டு ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகத் ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், தடம் புரண்ட ரயில் தடமேற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.11.2024 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# அரசியலும் அனுபவமும்

பாராளுமன்ற தேர்தல் பிரசார காலத்தில் ஒரு புறத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுபவமின்மை காரணமாக தேசிய மக்கள் சக்தியின் 'எல் போர்ட்' அரசாங்கம் சில மாதங்களில் வீழ்ச்சிய டைந்துவிடும் என்று கூறியதையும் மறுபுறத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் அனுபவத்தைப் பற்றி பெருமை பேசுகின்ற முன்னாள் ஜனாதிபதியும் அவருடன் சேர்ந்தவர்களும்தான் நாட்டைச் சீரழித்தார்கள் என்று கூறியதையும் நாம் அறிவோம்.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களில் அதிகப் பெரும்பாலானவர்கள் அரசியலுக்கு புதியவர்கள் என்று பார்க்காமல் அவர்களுக்கு மக்கள் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களுடன் ஆணையை வழங்கியிருக்கிறார்கள். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் புதிய அமைச்சரவை 22 உறுப்பினர்களுடன் பதவியேற்றிருக்கிறது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் பல்கலைக்கழக கல்விமான்களும் அரசியல்வாதிகளுமாக 13 பேர் அமைச்சர்களாக இருக்கிறார்கள். அமைச்சரவையில் ஐந்து பேராசிரியர்களும் துறைசார் நிபுணர்கள் பலரும் இடம்பெற்றிருக்கிறார்கள். இவர்களில் ஏற்கனவே அமைச்சர்களாக இருந்த அனுபவத்தை கொண்டவர்கள் என்றால் ஜனாதிபதி திஸநாயக்கவும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்தும் மாத்திரமே. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இருவரும் பதினான்கு மாதங்கள் ( ஏப்ரல் 2004 - ஜூன் 2005 ) அமைச்சர்களாக இருந்தனர்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பொறுத்தவரை, திஸநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றதை தொடர்ந்து கடந்த இரு மாதங்களாக அமைச்சுப் பொறுப்புக்களை கவனித்த அனுபவத்தை மாத்திரமே கொண்டிருக்கிறார். ஏனைய அமைச்சர்கள் சகலரும் புதியவர்கள் என்பதுடன் அந்த பதவிகளில் எந்த அனுபவத்தையும் கொண்டிராதவர்கள்.

இது இவ்வாறிருக்க, நாளையதினம் கூடும் புதிய பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமானவர்கள் முதற்தடவையாக பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்கள். அதாவது 160 பேர் புதியவர்கள். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் ( நூறுக்கும் அதிகமானவர்கள் ) தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள். முன்னைய பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களில் 37 பேரை மாத்திரமே மக்கள் மீண்டும் தெரிவு செய்திருக்கிறார்கள்.

அமைச்சரவையில் பெரும்பாலானவர்கள் உயர்ந்த கல்வித் தகைமைகளைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இனிமேல்தான் அவர்கள் தங்களது அறிவையும் ஆற்றலையும் ஆட்சிமுறையில் பரீட்சித்து பார்க்கப் போகிறார்கள். அதேவேளை உயர்ந்த கல்வித்தகைமைகளைக் கொண்டிராத அமைச்சர்கள் மக்கள் மத்தியில் அரசியல் பணியாற்றிய வளமான அனுபவத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

அனுபவத்தைப் பற்றி பெரிதாக பேசுகின்ற விக்கிரமசிங்க கூட 1977 ஜூலை பாராளுமன்ற தேர்தலில் தனது 28ஆவது வயதில் கம்பஹா மாவட்டத்தின் பியகம தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற பிறகு ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கத்தில் உடனடியாகவே பிரதி வெளியுறவு அமைச்சராகவும் பிறகு சில மாதங்களில் கல்வியமைச்சராகவும் நியமிக்கப்பட்டதையும் மறந்துவிட்டார் போலும்.

அனுபவம் தேவையில்லை என்று இங்கு வாதிடப்படவில்லை. ஆனால், அரசியல் துணிவாற்றலும் நேர்மையும் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் பண்புமே முக்கியமானவை.

இறுதியாக இரு சுவாரஸ்யமான கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள 'ஈழநாடு' விரும்புகிறது.

புதியவர்கள் பெருமளவில் பாராளுமன்றத்துக்கு வருவது குறித்து ஆசிரிய தலையங்கம் எழுதிய ஒரு கொழும்பு ஆங்கிலப்பத்திரிகை "தற்போதைய நிலைவரம் வளரிளம் பருவத்தில் உள்ளவர்களையும் மதுவையும் வாகனச் சாவியையும் ஒன்றாக வைத்தது போன்று இருக்கக்கூடாது" என்று குறிப்பிட்டிருந்தது.

புதிதாக வரும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அனுபவமில்லை என்று கூறப்படும் விமர்சனம் புதுமாப்பிள்ளையிடம் 'குடும்பம் நடத்திய அனுபவம்' இருக்கிறதா என்று கேட்பதற்கு ஒப்பானதாகும் என்று கூறினார் முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2024




"நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது."

-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

# மாணவர் நினைவாக இரத்ததான முகாம்

வடமராட்சி, நவ. 20

பருத்தித்துறை ஹாட்லியின் மைந்தர்களின் 25 மற்றும் 20 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு ஹாட்லியின் மைந்தர்கள் நிதியத்தின் ஏற்பாட்டில், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்த வங்கி பிரிவினரின் அனுசரணையில் இரத்ததான முகாம் திங்கட்கிழமை நடைபெற்றது.





கல்விச் செயல்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன் பர்சிட்டி கடற் பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த வேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்த யாழ். ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நான்கு பேரின் 25 ஆவது ஆண்டு மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்று வந்த வேளை புகையிரத விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவனின் 20 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஹாட்லிக் கல்லூரியின் மண்டபத்தில் இந்த இரத்த முகாம் நடைபெற்றது.

(எ-02)

# கந்தபுராண தொடர் சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 20

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் சுக்கிரவாரக் கந்தபுராண தொடர் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் 22 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமி நாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சிறப்புச் சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் க. கயிலைவாசனும் "மேருப் படலம்" என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாச பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# வடமாகாண ஆளுநர் வேதநாயகனுடன் கடற்படை கட்டளை தளபதி சந்திப்பு




யாழ்ப்பாணம், நவ. 20

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை கடற்படையின் வடபிராந்திய கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் துஷார கருணதுங்க யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது யாழ். தீவுப் பகுதி மக்களின் கடல் மார்க்க போக்குவரத்து மற்றும் தீவுகளில் வசிக்கும் மக்களுக்கான வசதி வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு கடற்படையினர் முன்னெடுத்துள்ள செயல்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டது. (எ-05)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வாகனபழுதை சரி செய்வீர்கள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் நீங்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். விலகி சென்ற உறவினர்கள் விரும்பி வந்து பேசுவார்கள். நல்ல செய்தி வரும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி இருக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம்.

**சிம்மம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றி கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். திடீர் சந்திப்புகள் நிகழும். முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். மகிழ்ச்சியான நிலை உருவாகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்சினைகள் தலைதூக்கும். குடும்பத்தில் எல்லாவற்றையும் நீங்களே இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள்.

**தனுசு**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்ய தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். அமைதி நிலவும்.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. அரசால் அனுகூலம் உண்டு. மகளுக்கு நல்லவரன் அமையும். வாகனபழுதை சரி செய்வீர்கள்.

# சித்த மருத்துவ பீடாதிபதியாக விவியன் சத்தியசீலன் தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக சித்த வைத்தியக் கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்ற சித்த மருத்துவ பீடச்சபை கூட்டத்தில் நடத்தப்பட்ட பீடாதிபதி தெரிவின் போது 04 மேலதிக வாக்குகளைப் பெற்று கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதுவரை காலமும் சித்த மருத்துவ அலகாகச் செயல்பட்டு வந்த சித்த மருத்துவ கற்கை அலகு கடந்த ஜூலை 26 ஆம் திகதி பீடமாகத் தரமுயர்த்தப்பட் டது.

சித்த மருத்துவ பீடத்தில் நஞ்சியல் மற்றும் பரம்பரை மருத்துவம், மனித உயிரியல், சமூகநல மருத்துவம், சிரோரோகமும் அறுவை மருத்துவமும், நோய் நாடல் சிகிச்சை, குணபாடம், மூலதத்துவம் ஆகிய கற்றல் துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சித்த மருத்துவ அலகு பீடமாகத் தரமுயர்த்தப்பட்ட நாளிலிருந்து முன்னாள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான விவியன் சத்தியசீலன், பதில் பீடாதிபதியாகச் செயல்பட்டு வந்தார். (எ)



# ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு 3 இளைஞர்கள் பொலிஸாரால் கைது

வவுனியா, நவ. 20

வவுனியா வீரபுரம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வாரம் பாடசாலையில் உயர்தர மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது, இளைஞன் ஒருவர் ஆசிரியர் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, மாணவி ஒருவரிடம் பேசவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு ஆசிரியர் மறுத்துள்ளார். இந்த நிலையில் இருவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.
அன்றையதினம் மாலை ஆசிரியர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்ற இளைஞர்கள் ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் தமக்கு போதிய பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்து பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களும் நேற்றையதினம் சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இதேவேளை, ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய குற்றச் சாட்டில் மூன்று இளைஞர்கள் செட்டிக்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னரும் இரு ஆசிரியர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவங்களும் குறித்த பாடசாலையில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# சுழிபுரத்தில் வாள் வைத்து அட்டகாசம் இளைஞனை மடக்கிப் பிடித்த மக்கள்

யாழ்ப்பாணம், நவ. 20

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பாண்டவட்டை பகுதியில் வாள் வைத்து அட்டகாசம் செய்த 18 வயது இளைஞன் ஒருவர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை குறித்து இளைஞன் மிரட்டல் விடுத்த நிலையில் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

குறித்த இளைஞனை வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# ஐந்து லீற்றர் கசிப்புடன் அராலியில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 20

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி தெற்கு பகுதியில் ஐந்து லீற்றர் கசிப்புடன் 48 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்றைதினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வருவதாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# யாழில் திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 20

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற் பொழி [illegible] தெற்கு திருவருள்மிகு சிறீ நாகராஜா இராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் , பிரசங்க பூஷணம் க. கைலநா தன்“மாணிக்கவாசகரும் பிரார்த்தனைப்பத்தும்” என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை குறைக்க திட்டம்

**பாராளுமன்றத்தின் அதிக செலவை மட்டுப்படுத்தும் நோக்கில் இந்த முடிவு**

கொழும்பு, நவ. 20

**பாராளுமன்றத்தின் அதிக செலவைக் குறைக்க, உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.**

இதனை வழிநடத்துவதற்கு இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற அதிகாரியின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உறுப்பினர்களுக்கு இதுவரை அனுபவித்து வந்த வாகன கொடுப்பனவு, ஓய்வூதியம், வீடமைப்பு கொடுப்பனவு மற்றும் ஏனைய நிதி சலுகைகளை குறைப்பதற்கான பிரேரணையை இந்த குழு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.

இதேவேளை, பாராளுமன்றத்தின் வருடாந்த வரவுசெலவுத் திட்டம் 4-5 பில்லியன் ரூபா வரம்பில் உள்ளதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகளுக்காக மட்டும் ஒரு பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என பாராளுமன்ற புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்தியுள்ளன. (அ)

# ரூ. 90 மில்லியன் பெறுமதியான போதை மாத்திரைகள் சிக்கின!

கொழும்பு, நவ. 20

கொழும்பு துறைமுகத்தில் உள்ள களஞ்சியசாலையில் இருந்து 90 மில்லியன் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகளை இலங்கை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒலிபெருக்கி பெட்டிகளில் குறித்த கையிருப்பு மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

# 8 வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, நவ. 20

விசா இன்றி நாட்டில் தங்கியிருந்த எட்டு வெளிநாட்டவர்கள், கட்டுநாயக்க பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் குறித்த அனைவரும் கைதாகினர். கைதான அனைவரும் பங்களாதேஷ் பிரஜைகள் என தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# காலி கட்டடமொன்றில் ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, நவ. 20

காலி, கொனபீனுவல பிரதேசத்தில் அமைந்துள்ள விற்பனை நிலையம் ஒன்றிற்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கொனபீனுவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

40 வயது மதிக்கத்தக்க 05 அடி 04 அங்குலம் உயரமுடைய நபரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# நிதி கொண்டு சென்ற வாகனத்தை கடத்தி கோடிக்கணக்கில் கொள்ளையிட்ட சாரதி!

கொழும்பு, நவ. 20

மினுவாங்கொடையில் பணத்தைப் பாதுகாப்பான முறையில் கொண்டு செல்லும் தனியார் நிறுவனம் ஒன்றின் சாரதியாக செயற்பட்ட ஒருவர் ஏழரை கோடி ரூபாவை கொள்ளைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

மினுவாங்கொடை நகரில் வைத்து நிதி கொண்டு செல்லப்பட்ட வாகனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வாகனத்தை விட்டு இறங்கியுள்ளனர்.

இதனையடுத்து, அவர் பணத்துடன் வாகனத்தைக் கடத்திச் சென்றுள்ளார்.

இதன்பின்னர், குறித்த வாகனம் கம்பஹா - உக்கல்பொட பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தப்பிச் சென்றவரைக் கைது செய்வதற்காக பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளது.

இதற்கமைய, அவரின் புகைப்படத்தை ஊடகங்களில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# பாராளுமன்ற முதல் அமர்வு மிகஎளிமையான முறையில்!

கொழும்பு, நவ. 20

10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வை எளிமையான முறையில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் நாளை முற்பகல் 10 மணிக்கு முதலாவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது சபாநாயகர் தெரிவு, பிரதிச் சபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு என்பன இடம்பெறும்.

இதனையடுத்து, முற்பகல் 11.30 மணிக்கு ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கவுள்ளார்.

அரசாங்கத்தின் எதிர்கால நோக்கு தொடர்பிலான விளக்கமான பகுப்பாய்வு கொள்கைப் பிரகடனத்தை, ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் முன்வைப்பார். ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையைத் தொடர்ந்து, நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்படும்.

இந்நிலையில், 10 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வை எளிமையான முறையில் நடத்துமாறு ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். (அ)

# இராஜாங்க அமைச்சர்கள் அநுரவின் அரசில் இல்லை

கொழும்பு, நவ. 20

ஜனாதிபதி அநுர தலைமையிலான இலங்கையின் புதிய அரசாங்கத்தினால் எந்தவொரு இராஜாங்க அமைச்சரும் நியமிக்கப்படமாட்டார்கள் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அடுத்த ஓரிரு தினங்களில் 26 முதல் 28 வரை பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என அவர் கூறினார்.

தேர்தலுக்கு முன்னர் நாட்டுக்கு முன்வைக்கப்பட்ட விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளவாறு தமது கட்சி இராஜாங்க அமைச்சர்களை நியமிக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

சில அமைச்சரவை அமைச்சுக்களுக்கு இரண்டு பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றபோதிலும் அனைத்து அமைச்சுக்களுக்கும் பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ரயிலில் பயணித்த இளைஞன் மின்கம்பத்தில் மோதி மரணம்!

கொழும்பு, நவ. 20

ரயில் மிதிபலகையில் பயணித்த இளைஞர் ஒருவர் ரயில் கடவைக்கு அருகில் உள்ள சமிக்ஞை கம்பத்தில் மோதி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் காலை, பொல்கஹவெலயிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற விரைவு ரயிலில் பயணித்த இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

கணேமுல்ல பகுதியைச் சேர்ந்து 21 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் ராகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கிரிபத்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# விற்பனை நிலைய உரிமையாளர் ஆயுதத்தால் தாக்கிப் படுகொலை!

கொழும்பு, நவ. 20

விற்பனை நிலையம் ஒன்றுக்கு வந்த நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி அதன் உரிமையாளரைக் கொலை செய்துள்ளார்.

எல்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவதகல பிரதேசத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

எல்பிட்டிய மேல் நவதகல பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் நடத்திய விசாரணையில் விற்பனை நிலையத்திற்கு குடிபோதையில் வந்த நபரே இந்த கொலையை செய்தது தெரியவந்துள்ளது. சந்தேக நபர் நவதகல பிரதேசத்தை சேர்ந்த 34 வயதுடையவராவார்.

சந்தேக நபரும் காயமடைந்து எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை உயிரிழந்தவரின் சடலம் எல்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. எல்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பெரும்போக உரமானியம் முதலாம் கட்டம் நிறைவு

கொழும்பு, நவ. 20

விவசாயிகளுக்கு பெரும்போகத்திற்கான உர மானியங்களை வழங்குவதற்கான முதலாம் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன. அதன்படி, 23 மாவட்டங்களுக்கு 86,162 ஹெக்ரேயர் பயிர்ச்செய்கைக்கு உர மானியம் வழங்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 129,229 விவசாயிகளுக்கு சுமார் 1.29 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக கமநல சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை, பயிர்செய்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கப்படும் என கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம் ரோஹன ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொலனறுவை மாவட்டத்தின் சில பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு கிரிதலை மற்றும் கௌடுல்ல நீர்த்தேக்கங்களில் இருந்து தாமதமாக நீர் திறந்து விடப்படுவதால் விவசாயிகளுக்கு இந்த மானியம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பிரதாய அரசியல்வாதிகள் பலரை அரசியலிலிருந்து நீக்கிய தேர்தல் இது!

### பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 20

**தேர்தல் பெறுபேறு தேர்தல் கலாசாரத்தை முற்றாக அரசியல் வரைபடத்தில் இருந்து அகற்றிவிடவும் சம்பிரதாய அரசியல்வாதிகள் பலரை அரசியல் செயல்பாட்டில் இருந்து நீக்கிவிடும் வகையில் அமைந்துள்ளது. தேர்தல் தினத்தில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் எந்த முறைப்பாடும் இல்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.**



பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னரான தேர்தல் வன்முறைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் பிரசார காலப்பகுதியில் ஒரு சில வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்தபோதும் தேர்தல் தினத்திலும் அதற்கு பின்னரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை.

அதேபோன்று தேர்தல் சட்ட திட்டங்களை தேர்தல் ஆணைக்குழு, பொலிஸார் மிகவும் உறுதியாக கடைப்பிடித்து வந்தனர்.

தேர்தல் பிரசார செலவுச் சட்டத்தின் கீழ் இடம்பெற்ற முதலாவது பாராளுமன்ற தேர்தல் என்பதால் இந்த தேர்தல் விசேட தேர்தலாக கருதப்படுகிறது.

நடைபெற்று முடிந்த இந்த பாராளுமன்ற தேர்தல், தேர்தல் கலாசாரத்தை முற்றாக அரசியல் வரைபடத்தில் இருந்து அகற்றிவிடவும் சம்பிரதாய அரசியல்வாதிகள் பலரை அரசியல் செயற்பாட்டில் இருந்து நீக்குவதற்கும் ஏதுவாக அமைந்துள்ளது. அந்த வகையில் இந்த தேர்தல் மிகவும் தீர்மானமிக்கதாக அமைந்துள்ளது.

அதேபோன்று தேர்தல் காலத்தில் அரச அதிகாரம், அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வது அனைத்து தேர்தல்களிலும் நாங்கள் காணக்கூடிய தொன்றாக இருந்து வந்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் நடவடிக்கைகள் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றாலும் அரச அதிகாரங்கள் மற்றும் அரச சொத்துக்கள் பாவனை மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால் இந்த தேர்தலில் அரச அதிகாரம் மற்றும் அரச சொத்துக்களின் பாவனை பயன்படுத்தப்படாத மட்டத்திலேயே இருந்தது.

அதனால் நீதி மற்றும் சுதந்திரமான தேர்தல் ஒன்றுக்கு தேவையான அடிப்படை அளவுகோலில் நூற்றுக்கு 80 வீதத்துக்கும் அதிகம் பூரணப்படுத்துவதற்கு முடியுமான தேர்தலாகவே இந்த தேர்தலை நாங்கள் காண்கிறோம்.

மேலும் இந்த தேர்தல் பெறுபேறு மூலம் வீழ்ச்சியடைந்துள்ள தேர்தல் கலாசாரத்தை மாற்றியமைப்பதற்கும் அதேபோன்று பாராளுமன்றத்தின் உண்மையான பொறுப்பை புதிய பாராளுமன்றத்துக்கு மேற்கொள்ள முடியுமாகும் என நாங்கள் நம்புகிறோம்.

இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் தேவைப்படாது என நாங்கள் நினைக்கிறோம்- என்றார். (அ)

# ரவி கருணாநாயக்கவின் வீட்டுக்கு முன் பாதுகாப்பு

கொழும்பு, நவ. 20

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் வீட்டுக்கு முன்பாக பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு ரவி கருணாநாயக்கவின் பெயர் அறிவிக்கப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.


இந்நிலையில், அக்கட்சியின் வஜிர அபேவர்தன நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி தேசியப்பட்டியல் நியமனம் வழமைக்கு முரணானது என தெரிவித்திருந்தார்.

இது கட்சியுடன் கலந்தாலோசிக்காமல் எடுக்கப்பட்ட முடிவு என சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தின் தேசியப் பட்டியலில் ரவி கருணாநாயக்கவின் பெயர் உள்ளடக்கப்பட்டமை தொடர்பில் அந்த முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் பல தரப்பினர் ஆட்சேபனைகளை வெளியிட்டுள்ளனர்.

இதன்படி ரவி கருணாநாயக்கவின் வீடு முற்றுகையிடப்படவேண்டும் எனவும், இந்த முடிவை மாற்றியமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித்தார்.

இந்நிலையிலேயே நேற்று ஏதேனும் எதிர்ப்புகள் ஏற்படும் என்ற அச்சத்தில் ரவி கருணாநாயக்கவின் வீட்டுக்கு முன்பாக பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. (அ)



# பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம் !

கொழும்பு, நவ. 20

பொலிஸ் உயர் அதிகாரிகள் பலர் இந்த வார இறுதிக்குள் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உதவி பொலிஸ் அத்தியட்சர்கள் முதல் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் வரையிலான பதவி நிலைகளை வகிக்கும் அதிகாரிகள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ள அதிகாரிகள் தொடர்பிலான பட்டியல் பொதுப்பாதுகாப்பு அமைச்சினால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரைகள் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு எதிர்வரும் 20ஆம் திகதி தீர்மானம் எடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட அதிகாரிகள், மூன்றாண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் கடமையாற்றிய அதிகாரிகள், வினைத்திறன் இன்றி செயற்படும் அதிகாரிகள் ஆகியோர் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவியிலும், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரி பதவியிலும் மாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உயர் அதிகாரிகளுக்கான இடமாற்றத்தின் பின்னர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என தெரியவருகின்றது. (அ)

# தேசியப்பட்டியல் எம்.பிக்கள் நியமனம் ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடு!

கொழும்பு, நவ. 20

ஐக்கிய மக்கள் சக்தி பெற்ற தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதில் ஐக்கிய மக்கள் சக்தியினுள் கடும் முரண்பாடுகள் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தற்போது அந்த ஆசனத்துக்கு ரஞ்சித் மத்தும பண்டார, இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார், டலஸ் அழகப்பெரும, ஜி.எல்.பீரிஸ் மற்றும் சுஜீவ சேனசிங்க ஆகியோரை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

ஆனால் அந்த ஆசனங்களுக்கு எரான் விக்ரமரத்ன, மனோ கணேசன் மற்றும் பலர் சேர்க்கப்படவேண்டும் என்று மற்றொரு குழுவினர் கருதுகின்றனர். சுஜீவ சேனசிங்கவின் நியமனத்துக்கும் ஒரு குழு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.இந்தத் தேர்தலில் ஐந்து தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை அக்கட்சி வென்றுள்ளது. (அ)

# தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட எம்.பிக்கள் பலர் வெளியேற்றம்

கொழும்பு, நவ. 20

பாராளுமன்ற தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாதிவெலவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் குடியிருப்பில் இருந்து வெளியேறியுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை 30 பேர் வெளியேறியுள்ளதாகவும், மேலும் 80 பேர் வெளியேறப் போகிறார்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் குடியிருப்பை விட்டு வெளியேறுமாறு ஏற்கனவே முன்னாள் எம்.பிக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் நடைபெறும் நாள் வரை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டு இருந்தது.

# முச்சக்கரவண்டி விபத்தில் 4 மாணவர்கள் படுகாயம்!

கொழும்பு, நவ. 20

பாடசாலை மாணவன் செலுத்திய முச்சக்கரவண்டி பிரதான வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டியில் பயணித்த மாணவர் உட்பட நான்கு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மாணவர்கள் உடனடியாக நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை கினிகத்தேன நாவலப்பிட்டி பிரதான வீதியில் கினிகத்தேனை நூலகத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

கினிகத்தேனை கடவல தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களே விபத்தில் காயமடைந்துள்ளனர்.

பாடசாலையில் இடம்பெற்ற வைபவம் முடிந்து நான்கு மாணவர்களும் முச்சக்கர வண்டியில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. வளைவான பகுதியில் அதே திசையில் சென்ற வானை முந் திச் செல்ல முற்பட்ட போது, எதிரே வந்த பஸ் ஒன்று முச்சக் கரவண்டியுடன் மோதியதில் வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள் ளானது.

எவருக்கும் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை எனவும் கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மின்னல் தாக்கி இளைஞன் பலி!

கொழும்பு, நவ. 20

காலி - எல்பிட்டிய, மத்தேவில பிரதேசத்தில் இளைஞரொருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் கறுவாத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.மத்தேவில பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவ ராவார்.

மின்னல் தாக்கி படுகாயமடைந்த இளைஞன் எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்கள் வழங்கிய ஆதரவு பிரிவினைவாதத்துக்கு எதிரானது!

**கூறுகின்றார் விமல் வீரவன்ஸ**

கொழும்பு, நவ. 20

**தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள ஆதரவானது இனவாதத்துக்கு எதிரானது மட்டுமல்ல பிரிவினைவாதத்துக்கும் எதிரானது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பிரிவினைவாதத்துக்கு சார்பாக செயற்பட்டுவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பதிலாக, தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் ஆதரவளிக்கப்பட்டுள்ளது. இனவாதம் மற்றும் பிரிவினைவாதத்துக்கு தாம் எதிரானவர்கள் என்ற செய்தியை இதன்மூலம் மக்கள் வழங்கியுள்ளனர்.

ஒற்றையாட்சிக்குள் அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை கிட்டும் வகையிலான பயணம் தொடர வேண்டும் என்பதற்குரிய ஆணையே இந்த அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கான எமது பொறுப்பை நாம் என்றும் கைவிடப்போவதில்லை. அந்த பயணம் தொடரும். பிரபுக்கள் அல்லாத தரப்புகள் வசம் ஆட்சி சென்றுள்ளது. இதனை வரவேற்கின்றோம்.

டயஸ்போராக்கள் மற்றும் அந்நிய சக்திகளின் நிபந்தனைகளுக்கு அடிபணியாமல் பயணித்தால் ஆதரவளிக்கப்படும். அவ்வாறு இல்லையேல் அதற்கு எதிராக மக்களை அணிதிரட்டுவோம்-என்றார். (அ)

# 2 பாடசாலை மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகம்!

**கணித ஆசிரியர் கைது**

கொழும்பு, நவ. 20

இரு பாடசாலை மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் கணித ஆசிரியர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி, எல்பிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் 54 வயதுடைய கணித ஆசிரியர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பாடசாலையில் 5 ஆம் தரத்தில் கல்வி கற்கும் 10 வயதுடைய இரு மாணவிகளே பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகியுள்ளனர்.

சந்தேக நபர் தனது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகளுக்கு மேலதிக வகுப்புகளை நடத்தி வந்தார்.

இதன்போது, சந்தேக நபரான கணித ஆசிரியர் இந்த இரு மாணவிகளையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பின்னர், பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான மாணவிகளின் பெற்றோர்கள் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (அ)

# பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய இளைஞன் கைது!

கொழும்பு, நவ. 20

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இளைஞன் ஒருவன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துருகிரிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாலசிங்ககொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் ஹோகந்தர பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய இளைஞர் ஆவர்.

சந்தேக நபர் பாதுக்க பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடியுள்ளதாகவும் மாலம்பே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் விற்பனை நிலையம் ஒன்றில் திருடியுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# லொஹானின் வைத்திய அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, நவ. 20

பதிவு செய்யப்படாத சொகுசு வாகனம் வழக்கு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் உடல்நிலை குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வைத்தியசாலை அதிகாரிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

லொஹான் ரத்வத்த தற்போது கொழும்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

லொஹான் ரத்வத்த சார்பில் ஆஜரான முன்னாள் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், இடைக்கால நிவாரணத்துக்கான ரிட் விண்ணப்பத்துக்கு ஆதரவைக் கோரினார்.

எவ்வாறாயினும், சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஷனில் குலரத்ன ஆட்சேபனைகளை முன்வைத்து, இந்த மனுவுக்கு எதிராக வரையறுக்கப்பட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்யவேண்டும் என்று தெரிவித்தார்.

உண்மைகளை பரிசீலித்த நீதிமன்றம் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை நவம்பர் 29ஆம் திகதிக்குள் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஷஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த ரிட் மனுவை டிசெம்பர் 9ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளது. (அ)

# விமலுக்கு சான்றிதழ் வழங்கிய வைத்தியருக்கு அழைப்பாணை

கொழும்பு, நவ. 20

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவின் சார்பில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்காக மருத்துவச் சான்றிதழை வழங்கிய பாணந்துறை மருந்தகத்தின் வைத்தியர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நோட்டீஸ் அனுப்பியுள்ளார். 75 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான சொத்துக்கள் மற்றும் பணத்தை வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரணை செய்யும் போதே மேல் நீதிமன்ற நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஏப்ரல் 18 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், பிரதிவாதி விசாரணைக்கு வரவில்லை. பாணந்துறை பிரதேசத்தில் உள்ள மருந்தகத்தின் வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட மருத்துவ சான்றிதழ் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது, குற்றஞ்சாட்டப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் இதற்கு முன்னர் பல தடவைகள் சுகவீனமுற்றிருந்ததாகக் கூறி நீதிமன்றத்தை தவிர்த்திருந்ததை சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன நினைவு கூர்ந்தார்.

இருதரப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மருத்துவச் சான்றிதழ்களை சமர்ப்பித்து, விசாரணைத் திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னரும், பிரதிவாதி நீதிமன்றில் ஆஜராகாத பட்சத்தில், அது நீதி பரிபாலனத்திற்கு பாரிய இடையூறாக அமையும் என மேல் நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டினார்.

குற்றம் சாட்டப்பட்ட விமல் வீரவன்ஸவுக்கு வைத்தியரால் வழங்கப்பட்ட சிகிச்சை தொடர்பான அனைத்து ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை சமர்ப்பிக்குமாறு குறித்த மருந்தகத்தின் வைத்தியர் ரொஷான் லியனாராச்சிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு சிகிச்சை அளித்தது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் விசாரணைக்கு மறுநாள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட மருத்துவர் எந்தெந்த நாட்களில், எந்த நேரத்தில் சிகிச்சை அளித்தார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டது.

ஆவணங்கள் மூலம் குற்றம் சாட்டப்பட்டவரின் நோய் கண்காணிப்பு பதிவுகள், மருத்துவ பரிசோதனை அறிக்கைகள், மருத்துவ சிகிச்சை அறிக்கைகள், பரிந்துரைக்கப்பட்ட மருந்து அறிக்கைகள் ஆகியவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டபோது, சம்பந்தப்பட்ட வைத்தியர் ஆவணங்களை சமர்ப்பிக்காதது குறித்து நீதிமன்றம் வினவியது.

மருத்துவர் வேறொரு நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதன்படி, அடுத்த நீதிமன்ற திகதியில் மருத்துவர் நேரில் ஆஜராகுமாறு மேல்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

விமல் வீரவன்சவுக்கு எதிராக 2017ஆம் ஆண்டு தாக்கல் செய் யப்பட்ட இந்த வழக்கின் திருத் தப்பட்ட குற்றப்பத்திரிகை நேற்று முன் தினம் கையளிக் கப்பட்டது. குற்றம் சாட்டப் பட்டவர்களுக்காக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ, தனது கட்சிக்காரர் அனைத்து குற்றச்சாட்டுக்களுக்கும் நிரபராதி என்று கூறினார்.

இந்த வழக்கு மார்ச் 26ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

# கம்பஹாவில் ரயிலில் மோதுண்டு பாடசாலை மாணவன் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 20

கம்பஹா ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு ரயிலில் மோதி பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக கம்பஹா தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 11 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 16 வயதுடைய மாணவன் ஒருவனே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பாடசாலை மாணவன் கம்பஹா பஹலகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா தலைமையக பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ருஹுணு பல்கலைக்கழகத்தில் கல்விசார் கல்விசாரா சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பு

கொழும்பு, நவ. 20

ருஹுணு பல்கலைக்கழகத்தில் கல்விசார் மற்றும் கல்விசாரா சங்கங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

ருஹுணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேனவை அப்பதவியில் இருந்து நீக்குமாறு கோரி இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கல்விசார் மற்றும் கல்விசாரா சங்கங்கள் தற்போது ருஹுணு பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகில் பேரணியாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 20

சந்தையில் கிடைக்கும் மரக்கறிகளின் அளவு வெகுவாகக் குறைந்துள்ள காரணத்தால் இந்த நாட்களில் மீண்டும் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மரக்கறிகளின் விலைகள் மேலும் அதிகரிக்கும். காய்கறி மொத்த விலை உயர்வால், காய்கறி விற்பனையாளர்களும், இடைத்தரகர்களும், மொத்த விலையை விட, சில்லரை விலையை, இரண்டு அல்லது மூன்று மடங்கு உயர்த்தியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் முக்கிய தளபதிகள் பாவித்த கைத்துப்பாக்கியா?

## அம்பாறையில் கைதான முன்னாள் இராணுவ சிப்பாயிடம் பொலிஸார் தீவிர விசாரணை!



கல்முனை, நவ. 20

**அம்பாறையில் கைத்துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவச் சிப்பாயிடம் மேலதிக விசாரணைகள் பல கோணங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் பாவித்த துப்பாக்கியா? என்ற கோணத்திலும் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.**

அம்பாறை வாவின்ன பரகஹகலே பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட நபர் பின்னர் இகினியாகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அம்பாறை விசேட அதிரடிப் படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் இகினியாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாவின்ன பரகஹகலே பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மைக்ரோ ரக தானியங்கி கைத்துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்கள் மற்றும் இரண்டு தோட்டா மகசீன்கள் மற்றும் ஆயுதங்களை சுத்தம் செய்யும் கருவியை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் இராணுவ சிறப்புப் படையில் முன்னர் பணியாற்றியவர் என்பதுடன் அவரது வீட்டு காணியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த 9 எம். எம். துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மீட்கப்பட்ட துப்பாக்கியின் இலக்கம் அழிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் தொடர்பிலும் அவரிடமிருந்து மீட்கப்பட்ட துப்பாக்கி தொடர்பிலும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், சந்தேக நபர் குறித்த துப்பாக்கியை போர் நடைபெற்ற வேளை வடபகுதியில் கடமையில் இருந்து எடுத்து வந்தாரா அல்லது விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் பாவித்த துப்பாக்கியா அல்லது இராணுவக் களஞ்சிய சாலையில் இருந்து பெறப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதா அல்லது பல்வேறு குற்றச் செயலுக்காக எடுத்து வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதா? என பல கோணங்களில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரையின் பிரகாரம் அம்பாறை வலய கட்டளை அதிகாரி, பொலிஸ் அத்தியட்சகர் ஏ. எஸ். பி. குணசிறியின் வழிகாட்டலில் அம்பாறை முகாமின் பதில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. பி. சம்பத்குமார, அம்பாறை விசேட அதிரடிப் படை முகாமின் பதில் முகாம் கட்டளை அதிகாரி, பொலிஸ் பரிசோதகர் அமில நிரோஷன் ஜெயசிங்க, உப பொலிஸ் பரிசோதகர் எச். எம். எஸ். ரத்நாயக்க உள்ளிட்டோர் இந்தச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கைத்துப்பாக்கியுடன் கைதான முன்னாள் இராணுவச் சிப்பாயிடம் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(எ)




# சாரணர்களுக்கு நீச்சல் பயிற்சி

கல்முனை, நவ. 20

சாரண மாணவர்களுக்கு அக்கரைப்பற்று பெப்ல்ஸ் சரவ தேச பாடசாலையின் நீச்சல் தடாகத்தில் நீச்சல் பயிற்சி வழங்கப்பட்டது.

அக்கரைப்பற்று - கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட சாரண ஆணையாளர் எம். ஐ. உதுமா லெப்பையின் வழிகாட்டலின் கீழ் ஒழுங்கமைத்திருந்த நீச்சல் பயிற்சியில் சாரணர்கள் பங்கேற்றனர்.

மாவட்ட சாரணர் சங்கத்தின் பதக்கச் செயலாளர் எம். ஐ. ஜெயீனுடீன் தலைமையிலான பயிற்றுவிப்பாளர்கள், சாரணர்களுக்கான நீச்சல் பயிற்சியை வழங்கியிருந்தனர். (எ)






கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டு நினைவைக் கொண்டாடும் பவள விழா சிறப்பு நிகழ்வு திங்கட்கிழமை அதிபர் எம். ஐ. ஜாபிர் தலைமையில் நடைபெற்றது.

# வித்தகர் விருது பெறும் இரு கல்வியியலாளர்கள்

திருகோணமலை, நவ. 20

கிழக்கு மாகாணத்தின் உயரிய விருதான "வித்தகர்" விருதை கல்முனை பிராந்தியத்தின் இரு கல்வியியலாளர்கள் நாளை வியாழக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

காரைதீவைச் சேர்ந்த ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜாவும் பாண்டிருப்பைச் சேர்ந்த ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜெ. டேவிட்டும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (எ)

# திருகோணமலையில் நாளை கிழக்கு மாகாண இலக்கிய விழா

திருகோணமலை, நவ. 20

கிழக்கு மாகாண இலக்கிய விழா நாளை 21 ஆம் திகதி வியாழக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளாக விருது பெறும் கலைஞர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. அவர்கள் அனைவருக்கும் இந்த விழாவில் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது என்று கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தெரிவித்தார்.

திருகோணமலை உவர்மலை விவேகானந்த கல்லூரியில் நாளை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக



கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2024 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள இலக்கிய விழாவில் விருதுகள் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கலைஞர்களுக்கு இது தொடர்பில் அந்தந்த கலாசார உத்தியோகத்தர்களால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 50 வீதத்துக்கும் அதிகமான தமிழர்கள் வாக்குரிமையை பயன்படுத்தவில்லை

## கோடீஸ்வரன் கவலையுடன் சுட்டிக்காட்டு

கல்முனை, நவ. 20

அம்பாறையில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்த தவறிவிட்டனர். இது மிகவும் கவலைக்குரிய விடயம் என்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான கவீந்திரன் கோடீஸ்வரன் கவலையுடன் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்காக அம்பாறை மாவட்டத்தில் உழைத்த 10 வேட்பாளர்களுக்கும் மக்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் என்றும் அவர் கூறினார்.

கல்முனை பிராந்தியத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்முனை குருந்தையடியில் நடைபெற்ற முதலாவது வரவேற்பு நிகழ்வில் அவர் மேலும் கூறுகையில்,

"அம்பாறை மாவட்ட தமிழர்கள் இம்முறை தமது இருப்பை காப்பாற்றி இருக்கின்றார்கள். அடையாளத்தை உறுதிப்படுத்தி இருக்கின்றார்கள். அவர்களுக்கு



எமது நன்றிகள்.

எனினும் 50 வீதத்துக்கும் மேலானவர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த தவறியிருக்கின்றார்கள். இது மிகவும் கவலைக்குரிய விடயம். எமது மாவட்ட நிலைமையை கருத்தில் கொண்டு நிச்சயமாக அவர்கள் வாக்களித்து இருக்க வேண்டும்.

ஆனால், 50 வீதமான தமிழ் வாக்காளர்கள் ஏனோதானோ என்று இருந்தது உண்மையில் மனவருத்தற்குரியது.

எதிர்காலத்தில் இப்படியான அரசியல் விருப்பில்லாத தன்மை மற்றும் அலட்சியம் இருக்கக் கூடாது. வாக்களித்த அனைவருக்கும் மீண்டும் நன்றிகளை கூறுகின்றேன்"- என்றார்.

இதன் பின்னர் கல்முனை, பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, நாவிதன்வெளி போன்ற பல ஊர்களுக்கும் சென்று மக்களுடன் கலந்துரையாடி நன்றிகள் தெரிவித்தார் கோடீஸ்வரன். அங்கு அவருக்கு மக்கள் பெருவாரியாக திரண்டு வந்து மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிப்பூரில் மீண்டும் வெடித்தது கலவரம்!

## 5,000 துணை இராணுவத்தினர் விரைவு



புதுடில்லி, நவ. 20

**இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மீண்டும் வன்முறை - கலவரம் வெடித்துள்ளது. அங்கு தொடர்ந்து பதற்றம் நீடிப்பதால், சட்டம் - ஒழுங்கை நிலை நாட்ட கூடுதல் படைகளை அனுப்ப மத்திய அரசு முடிவு செய்துள்ளது.**

மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடி அந்தஸ்து கோரிய மைத்தேயி சமூகத் தினருக்கும், குகி பழங்குடியினருக்கும் இடையே கடந்த ஆண்டு மே மாதம் வன்முறை வெடித்தது. இதைத் தொடர்ந்து, இரு சமூகத்தினர் சார்ந்த ஆயுதக் குழுக்களும் அவ் வப்போது மோதலில் ஈடுபடுவதால் பதற்றமான சூழல் நீடித்து வருகிறது. மோதலில் இதுவரை 200இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், மணிப்பூரில் மீண்டும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராய, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் புதுடில்லியில் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், உள்துறை செயலர் கோவிந்த் மோகன், உளவுத் துறை இயக்குநர் தபன்டிகா உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூருக்கு கூடுதல் படையினரை அனுப்பவும், அங்கு விரைவில் முழு அமைதியை ஏற்படுத்த கவனம் செலுத்து மாறும் அமித் ஷா அறிவுறுத்தினார். மணிப்பூர் மக்களை வன்முறையில் இருந்து பாதுகாத்து, அமைதியை நிலை நாட்டும் வகையில் கூடுதலாக 5,000 துணை இராணுவத்தினரை அனுப்ப மத்திய உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

பதற்றமான சூழல் நிலவுவதால், மாநிலத்தில் பாடசாலைகள், கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. சமூக வலைத் தளங்களில் போலியான செய்திகளைப் பரவி அமைதிக்கு குந்தகம் ஏற்படுவதை தடுக்கும் வகையில், பல மாவட்டங் களில் இணைய சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. (எ)

# நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை பயன்படுத்துங்கள்

## பதவி விலகும் முன் பைடன் அதிரடி

கீவ், நவ. 20

நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளைப் பயன்படுத்திக் கொள்ள உக்ரைனுக்கு பைடன் நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பதவிக்காலம் விரைவில் முடிவடையவுள்ள நிலையில் உக்ரைனுக்கு அவர் வழங்கியுள்ள அனுமதி உலகளவில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒருவேளை உக்ரைன் அமெரிக்க ஏவுகணைகளைப் பயன்படுத்தினால் அது ரஷ்யா எல்லைக்குள் சென்று தாக்குதல் நடத்தும். அப்படி ஏவப்பட்டால், 1000 நாட்களுக்கும் மேலாக நடக்கும் இந்தப் போரில் முதன்முறையாக எல்லைப் பகுதிகளைக் கடந்து ரஷ்ய பிராந்தியங்களுக்குள் உக்ரைன் தாக்குதல் நடத்தியதாக அமையும். இதன் மூலம் போர் மேலும் தீவிரமடையும்.

இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான க்ரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறுகையில் "அமெரிக்காவின் இந்த அறிவிப்பு இந்தப் போரில் அதன் நேரடி தலையீட்டை வெளிப்படுத்துகிறது"- என்றார். (எ)

# 2024 இல் சவுதியில் 100 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

டுபாய், நவ. 20

சவுதி அரேபியா இந்த ஆண்டு மட்டும் 100க்கும் மேற்பட்ட வெளிநாட்டினருக்கு மரண தண்டனை நிறைவேற்றியுள்ளதாக தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு சவுதியில் நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் சர்வதேச நாடுகளை கவலையடைய செய்துள்ளது.

சவுதி அரேபியாவுக்கு போதைப்பொருள் கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட ஏமன் நாட்டவர் ஒருவருக்கு நஜ்ரானின் தென்மேற்குப் பகுதியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து வெளியான தகவலின்படி, 2024இல் இதுவரை 101 வெளிநாட்டவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த **2023 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளை** ஒப்பிடுகையில் இது மூன்று மடங்கு அதிகரிப்பு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2024இல் இதுவரை சவுதி அரேபியா மொத்தமாக **274** பேருக்கு மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது.



# பிலிப்பைன்சில் கரையை கடந்த புயல் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

மணிலா, நவ. 20

பிலிப்பைன்சில் புதிதாக உருவான வெப்ப மண்டல புயலால் பலத்த காற்றுடன் கூடிய கன மழை பெய்தது. பிகோல் நகரில் புயல் கரையை கடந்தபோது மணிக்கு 215 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசியது. இதனைத் தொடர்ந்து பெய்த கனமழையால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளக்காடாக மாறின.

மேலும், வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கிடையே பலத்த காற்றுக்கு ஏராளமான மின் கம்பங்கள் முறிந்து விழுந்ததால் அங்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.


# இஸ்ரோவின் செயற்கைக்கோளை விண்ணில் ஏவியது ஸ்பேஸ் எக்ஸ்

புதுடில்லி, நவ. 20

இஸ்ரோவின் ஜிசாட் - என்2 செயற்கைக்கோளை எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ ஆண்டு தோறும் பல செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவி வருகிறது. இவை அனைத்துமே சிறீஹரி கோட்டாவில் உள்ள விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ரொக்கெட்டுகள் மூலம் ஏவப்பட்டு வந்தன.

இந்த நிலையில் இஸ்ரோவின் ஜிசாட் - என்2 செயற்கைக் கோளை ஸ்பேஸ் எக்ஸ் ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது. ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் 9 ரொக்கெட் மூலம் இஸ்ரோவின் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் ஜிசாட் - என்2 விண்ணில் ஏவப்பட்டுள்ளது. இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 12.01 மணியளவில் செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்பட்டது. இந்த செயற்கைக்கோள் 4700 கிலோ கிராம் நிறை கொண்டது.



இஸ்ரோவுக்கும், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துக்கும் இடையே வர்த்தக ரீதியில் செயற்கைக் கோள் ஏவப்படுவது இதுவே முதல்முறையாகும். (எ)

# ரஷ்யா - உக்ரைன் போரில் 659 குழந்தைகள் உயிரிழப்பு

## 1,747 குழந்தைகள் காயம் - யுனிசெப் தகவல்

வாஷிங்டன், நவ. 20

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் 1,000 நாட்களை எட்டும் நிலையிலும், தீவிரமாக யுத்தம் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் இதுவரை **2,406** குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது, **659** குழந்தைகள் உயிரிழந்தனர், **1,747** குழந்தைகள் காயமடைந்துள்ளனர் என யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டிருக்கும் தகவலின்படி ரஷ்யா - உக்ரைன் போரில் ஒவ்வொரு வாரமும் குறைந்தது 16 குழந்தைகள் உயிரிழந்தும், காயமடைந்தும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கோடிக்கணக்கான குழந்தைகள் தொடர்ச்சியான தாக்குதல்களால் தங்கள் வாழ்க்கையை இழந்துள்ளனர். உணவு, மின்சாரம், குடிநீர் மற்றும் பிற தேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கூட இல்லாமல் வாழும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஜூலையில் இருந்து உக்ரைனில் தாக்குதல் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் உயிரிழப்புகள் மற்றும் நாட்டின் உட்கட்டமைப்பும் நிலைகுலைந்துள்ளது என்று யுனிசெப் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒருநாள் தொடர் இலங்கை வசமானது போராடி தோற்றது நியூசிலாந்து அணி

பல்லேகல, நவ. 20

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரை கைப்பற்றியது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இலங் கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர்களில் விளையாடி வருகி றது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடர் 1 - 1 என்ற கணக்கில் சம னில் முடிவடைந்தது. இதனையடுத்து இவ் விரு அணிக ளுக்கும் இடையே ஒருநாள் தொடர் நடைபெற்று வரு கிறது.

இதில் முதல் போட்டியில் இலங்கை வெற்றி பெற் றது. இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையே யான 2ஆவது ஒருநாள் போட்டி கண்டி பல்லேகலவில் நேற்று முன்தினம் பகல் - இரவு ஆட்ட மாக நடைபெற் றது. மழை காரணமாக இந்தப் போட்டி 47 ஓவர்களாக குறைக் கப்பட்டது.



இந்த போட்டியில் முதலில் துடுப்பெ டுத்தாடிய நியூசிலாந்து அணி 45.1 ஓவர் களில் 209 ஓட்டங்களுக்கு சகல விக் கெட்களையும் பறிகொடுத்தது. இலங்கை அணி சார்பில் சிறப்பாக பந்துவீசிய வண் டர்சே, தீக்சனா ஆகியோர் தலா 3 விக் கெட்களை வீழ்த்தினர். இதைய டுத்து 210 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு டன் விளையாடிய இலங்கை அணி 46 ஓவர்களில் 7 விக் கெட்கள் இழந்து போராடி வெற்றி பெற்றது.

இலங்கை தரப்பில் அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 74 ஓட்டங்கள் எடுத் தார். இந்த வெற்றியின் மூலம் 3 போட் டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 - 0 என இலங்கை கைப்பற்றியது. இரு அணிகளுக்கும் இடையி லான கடைசி ஒருநாள் போட்டி இன்று நடைபெறுகிறது. (எ)



# ஆண்கள் ரென்னிஸ் போட்டி ஜன்னிக் சின்னெர் சம்பியன்

துரின், நவ. 20

ஆண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி யில் வெற்றி பெற்ற இத்தாலியின் ஜன்னிக் சின்னெர் சம் பியனானார்.

உலகின் முன்னணி - 8 வீரர்கள் மட்டும் பங்கேற்ற ஆண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி இத்தாலி யின் துரின் நகரில் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டிக்கு லீக் மற்றும் அரையிறுதி சுற்றுகளின் முடிவில் இத்தாலியின் ஜன்னிக் சின்னெர் மற்றும் அமெரிக்காவின் ரெய்லர் பிரிட்ஸ் ஆகியோர் தகுதி பெற்றனர்.

இந்த நிலையில் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜன்னிக் சின்னெர் 6 - 4, 6 - 4 என்ற நேர் செட் கணக்கில் ரெய்லர் பிரிட்ஸை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார். (எ)

# 5 விக்கெட் வித்தியாசத்தில் மே. இ. தீவுகள் அணி வெற்றி


செயிண்ட் லூசியா, நவ.20

இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது ரி - 20 போட்டி யில் மேற்கு இந்திய தீவுகள் அணி 5 விக்கெட்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது.


இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுக ளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் 3 ஆட்டங்களில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 4ஆவது ரி - 20 போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழந்து 218 ஓட்டங்கள் குவித்தது. இங்கிலாந்து தரப்பில் ஜேக்கப் பெத்தேல் 62 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் குடகேஷ் மோடி 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து 219 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி 19 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 221 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் எவின் லீவிஸ் 68 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் ரெஹான் அகமது 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இந்தத் தொடரில் இதுவரை 4 போட்டிகள் நிறைவ டைந்துள்ள நிலையில் 3 - 1 என்ற கணக்கில் இங்கிலாந்து முன்னிலையில் உள்ளது.(எ)



# அஸ்வினிடம் ஆட்டமிழக்க நான் விரும்பவே மாட்டேன்



பெர்த், நவ. 20

அவுஸ்திரேலியாவில் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக குறிப்பாக அஸ்வினிடம் ஆட்டமிழப்பதை நான் விரும் பவே மாட்டேன் என்று ஆஸி அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்தார்.

இந்திய அணி, அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பார்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட வுள்ளது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் நாளை மறுதினம் 22ஆம் திகதி தொடங்குகிறது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு முன்னேற இந்தத் தொடரில் கட்டாயம் வென்றாக வேண்டும் என்ற நெருக்கடிக்கு மத்தியில் இந்தியா விளையாடவுள்ளது. இந்திய கிரிக்கெட் அணி கடைசி யாக அவுஸ்திரேலிய மண்ணில் நடந்த இரு டெஸ்ட் தொடரையும் கைப்பற்றி வரலாறு படைத்தது. இப்போது "ஹட்ரிக்" வெற்றிக்கு குறி வைத்துள்ளது. ஆனால், இந்த முறை இந்தியாவின் சவாலை நிச்சயம் முறியடிப்போம் என்று அவுஸ்திரேலிய அணியின் தலைவர் கம்மின்ஸ் கூறியுள்ளார்.

இந்த நிலையில், அவுஸ்திரேலியாவில் சுழற்பந்து வீச்சாளர்களிடம் விக்கெட்டை பறிகொடுக்க நான் விரும்ப மாட்டேன் என்றும், கடந்த முறை போல இம் முறை தம்மை அஸ்வினால் எளிதாக ஆட்டமிழக்க செய்ய முடியாது என்றும் ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்தார்.

# விராட் கோலி அதிக ஓட்டங்கள் குவித்தால் இந்தியா வெல்லும்

## ஆஸி. முன்னாள் தலைவர் கிளார்க்

மெல்பேர்ண், நவ.20

பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்ற விராட் கோலி அதிக ஓட்டங்கள் குவிக்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய மண்ணில் இந்திய வீரர் விராட் கோலியின் துடுப்பாட்ட சாதனை அசாதாரணமானது.

இன்னும் சொல்லப்போனால் அவர் இந்தியாவை விட அவுஸ்திரேலிய மண்ணில் தான் சிறப்பாக விளை யாடி உள்ளார் என்று நினைக்கிறேன்.

அவுஸ்திரேலியாவில் 13 டெஸ்ட்களில் விளையாடி 6 சதங்கள் அடித்துள்ளார். இந்திய அணி டெஸ்ட் தொடரை கைப்பற்ற வேண்டும் என்றால், அதிக ஓட்டங்கள் குவிக் கும் வீரராக விராட் கோலி இருக்க வேண்டும்- என்றார்.



# ரி - 20 போட்டி தரவரிசை பாபர் அஸாம் 2ஆம் இடம்

சிட்னி, நவ. 20

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது ரி - 20 போட்டியில் பாகிஸ்தான் அணியின் முன்னணி துடுப் பாட்ட வீரர் பாபர் அஸாம் 40 ஓட்டங்கள் எடுத்து ஆட் டமிழந்தார். அவர், 37 ஓட்டங்களை கடந்த போது சர்வ தேச ரி - 20 போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களின் பட்டியலில் 2ஆவது இடத்தில் இருந்த இந் திய அணியின் விராட் கோலியை (4,188) பின்னுக் குத் தள்ளினார்.

பாபர் அஸாம் ரி - 20 இல் 119 இன்னிங்ஸில் விளை யாடி 4,192 ஓட்டங்களை சேர்த்துள்ளார். இந்த வகை சாதனையில் ரோஹித் சர்மா 4,231 ஓட்டங்கள் குவித்து முதலிடத்தில் உள்ளார். ரோஹித் சர்மாவின் சாதனையை முறியடிக்க பாபர் அஸாமுக்கு இன்னும் 40 ஓட்டங்களே தேவை என்பது குறிப்பிடத்தக்கது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.தே.க....

இணைந்தால் மாத்திரமே அடுத்த ஐந்தாண்டுகளில் ஆட்சியை பிடிப்பது பற்றி சிந்திக்கலாம், அவ்வாறு இல்லையேல் நாமல் ராஜபக்ஷவுக்கான வாய்ப்பே அதிகரிக்கும் என இரு கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும் என சஜித் தரப்பில் வலியுறுத்திவரும் அரசியல் பிரமுகர்கள் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சர்வதேச...

கூடிய முள்ளிவாய்க்கால் மண்ணில் எங்களுடைய உரிமைப் பயணத்திற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சத்தியப் பிரமாணம் எடுக்கின்ற நோக்கத்தோடு வந்திருக்கின்றோம்.

இன்று தென்னிலங்கையில் ஒரு மாற்றம் நடைபெற்று இருக்கின்ற சூழலில் விசேடமாக வடக்கு - கிழக்கில் அதிலும் யாழ்ப்பாணத்தில் தென் இலங்கையில் நடைபெற்ற மாற்றத்தை போன்று ஒரு மாற்றம் நடைபெற்றதாகக் கூறி தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற கருத்தை கூட கூறுகின்ற அளவுக்கு ஆட்சியாளர்கள் உள்ளனர்.

எமது மக்களை அரசியல் மயமாக்கி ஆட்சியை ஏற்றுக்கொண்டதாக காட்ட விரும்புகின்ற முயற்சியை மிகப்பெரியளவில் தோற்கடித்து தமிழ் மக்களுடைய உண்மையான தேசப்பற்றுடைய -தமிழ் தேசத்தின் இருப்பை உறுதிப்படுத்தக் கூடிய தேச அங்கீகாரத்துடன் சுயநிர்ணய சமஷ்டி தீர்வை நோக்கி மட்டுமே நாங்கள் நகர முடியும் என்ற செய்தியை உலகத்துக்கு காட்டக்கூடிய வகையில் எங்களது இயக்கம் மிக தீவிரமான வகையில் இனிவரும் காலங்களில் இயங்கும்.

கடந்த 15 வருடமாக எங்கள் கொள்கைகளையும், மக்களுடைய அபிலாஷைகளையும் விட்டுக் கொடுக்காமல் தொடர்ச்சியாக செயற்பட்டு வந்திருக்கின்றோம். நாங்கள் மக்களோடு தோள் நின்று அவர்களுடைய அன்றாட பிரச்னைகளாக இருக்கலாம், அவர்களுக்கு இருக்கக்கூடிய அடக்குமுறையாக இருக்கலாம் அனைத்துக்கும் எதிராக போராடி இருக்கின்றோம். அதனையும் தாண்டி இன்று இருக்கக்கூடிய ஆபத்துக்களை உணர்ந்து எமது இயக்கத்தின் செயற்பாடுகள் இதுவரை காணாத அளவுக்கு பலப்படுத்த வேண்டும்.

நமது முயற்சிகளை மூன்று, நான்கு மடங்காக பெருப்பிக்க வேண்டும் அதைச் செய்வதன் ஊடாக மட்டுமே நாங்கள் தெற்கில் இருக்கக்கூடிய இனவாத சக்திகளுடைய இந்த நோக்கத்தை தோற்கடிக்கக்கூடியதாக இருக்கும்.

அத்தோடு கடந்த 15 வருடங்களாக எமது அரசியல் இயக்கம் முள்ளிவாய்க்காலில் நிறைவேறிய தமிழின படுகொலைக்கு, ஒரு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை உறுதியாக வலியுறுத்தி வந்திருக்கின்றோம். ஐ.நா மனித உரிமை பேரவையிலேயே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுடைய பல வீனங்களை நாங்கள் மக்களுக்கும் சர்வதேச மட்டத்திலும் எடுத்துக்காட்டி இருக்கின்றோம். அதனுடைய இயலாமையை நாங்கள் கடந்த 15 வருடங்களாக அனுபவித்து வந்திருக்கின்றோம்.

நாங்கள் தொடர்ந்து எங்களுடைய மக்களை அரசியல் மயப்படுத்துகின்ற அதே சமயம் மக்களுடைய முழு பலத்தையும் அணி திரட்டி ஒரு சர்வதேச குற்றவியல் விசாரணையை நடத்துவதற்கு விசேடமாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதற்குரிய அழுத்தங்களையும் வேறு சர்வதேச விசாரணையை நடத்தக்கூடிய அரங்குகளுக்கு இலங்கையை கொண்டு செல்வதற்குரிய எங்களுடைய பயணம் இன்னும் தீவிரம் அடையும் - என்றார். (அ)

## கஜேந்திரகுமார்...

தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட கஜேந்திரகுமார் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்குச் சென்ற கஜேந்திரகுமார் அங்கு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நினைவுத் தூபியில் பொதுச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்து அவர் சத்தியப்பிரமாணம் செய்து தனது கடமைகளை ஆரம்பித்தார்.

இந்த நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டத்தின்...

பொறுப்பேற்றுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை மக்கள் ஆணை கிடைக்கப் பெற்றுள்ளது.ஊழல் ஒழிப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே எமக்கு இந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சமூக பொருளாதார ரீதியில் மீட்சியை ஏற்படுத்தவேண்டுமாயின் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். நீதிமன்றத்தின் சுயாதீனத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்.

மக்களின் நம்பிக்கையை வெல்லும் வகையிலான நீதிமன்ற கட்டமைப்பு மற்றும் பொலிஸ் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.அதேபோன்று பல சட்டங்களில் குறைபாடுகள் உள்ளன. அவற்றில் மறுசீரமைப்பை ஏற்படுத்த வேண்டும்-என்றார். (அ)

## சுமந்திரன்...

வெளியிடவேயில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் கட்சிக்கு கிடைத்துள்ள தேசியப் பட்டியல் ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்று வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. அதில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், "வடக்கின் முதலமைச்சராக சுமந்திரன் பொருத்தமானவர்" என்ற சாரப்பட கருத்து வெளியிட்டார் என்று நேற்று முன் தினம் திங்கட்கிழமை 'ஈழநாடு' முன் பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

இது குறித்து சிறிதரன் தனது மறுப்பை வெளியிட்டார். இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

வவுனியாவில் நடந்த அரசியல் குழுக் கூட்டத்தில், வடக்கின் முதலமைச்சராக சுமந்திரன் பொருத்தமானவர் என்று நான் குறிப்பிடவேயில்லை. சுமந்திரனுக்கு இப்போது இந்த தேசியப்பட்டியல் ஆசனத்தை வழங்கத் தேவையில்லை. அவருக்கு காலம் வரும். அப்போது பதவி தானாக மடியில் விழும் என்றே கூறினேன். தேசியப் பட்டியல் ஆசனத்தை பெண் ஒருவருக்கு வழங்கவேண்டும். அல்லது மாவை சேனாதிராசாவுக்கும் குலநாயகத்துக்கும் அதனை அரைவாசி அரைவாசி காலத்துக்கு வழங்கலாம் என்றும் கூறினேன். பின்னர் சத்தியலிங்கத்துக்கு அதனை வழங்க இணங்கினேன். 'ஈழநாடு' வில் வெளியான கருத்துப்படி நான் எதனையும் கூறவில்லை - என்றார். (அ)

# வன்னிக்கு மேலும் ஒரு தேசிய பட்டியல்!

## 9 ஆக அதிகரித்த பிரதிநிதித்துவம்

வவுனியா, நவ. 21

வன்னி தேர்தல் மாவட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஊடாகமேலும் ஒரு தேசியப் பட்டியல் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரசின் முக்கியஸ்தரான முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது என்பவருக்கே குறித்த தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம்முறை பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தனித்து போட்டயிட்டு ஒரு ஆசனத்தை பெற்றுக்கொண்டதுடன் வன்னி உட்பட ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது.

அந்தவகையில் ஐக்கிய மக்கள் சக்



திக்கு கிடைக்கப் பெற்ற ஐந்து தேசியப் பட்டியல் ஆசனத்தில் ஒன்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸூக்கு வழங்குவதற்கு நேற்று தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் முக்கியஸ்தருமான முஹம்மது இஸ்மாயில் முத்து முகமது என்பவருக்கு குறித்த பிரதிநித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இவரது நியமனத்துடன் வன்னி மாவட்டம் 9 பாராளுமன்ற பிரதிநித்துவங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பிரசவத்தின்...

முன்னதாகவே குறித்த பெண்ணுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டிருந்தபோதிலும் உரிய விதமாக கவனிக்கப்படவில்லை எனவும் பெண் தனக்கு சிசேரியன் செய்யுமாறு கோரிக்கை விடுத்ததாகவும், வைத்தியர்கள் இயற்கை முறையில் குழந்தை பிரசவிக்க முயற்சித்த நிலையில் தாயும் பிள்ளையும் மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் கவனயீனத்தாலேயே குறித்த மரணம் இடம்பெற்றுள்ளதாகவும் மரணம் அடைந்த விடயத்தை நீண்ட நேரமாக உறவினர்களுக்குச் சொல்லாமல் மறைத்ததாகவும் உயிர் இழந்த பெண்ணின் உடலைக்கூட பார்ப்பதற்கு பெற்றோரை அனுமதிக்கவில்லை எனவும் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த பெண்ணின் மரணத்துக்கு உண்மையான காரணம் என்ன எனத் தெரிவிக்கும் வரை உயிரிழந்த பெண்ணின் உடலை பெற்றுக்கொள்ளப் போவதில்லை என உறவினர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்தில் பொதுமக்கள்,பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் கூடியிருந்த போதிலும் வைத்தியசாலைப் பணிப்பாளர், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளோ சம்பவ இடத்திற்கு நீண்ட நேரம் வருகை தரவில்லை எனவும் உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ)

## சீன...

உள்ள சிறு கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி வலைகள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை சீன அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருவதாகவும் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களர்கள் என்ற வேறுபாடுகள் இன்றி இலங்கையர்களாக வாழ்வதற்கு சீன அரசு தொடர்ந்து பாடுபடும் எனவும் தெரிவித்தார். (அ-02)

## தமிழர்களின்...

உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

இலங்கை தேர்தல் வரலாற்றில் தனித்த அரசியல் கட்சி ஒன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனித்து வெற்றி பெற்றுள்ளமை இதுவே முதல் தடவையாகும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களின் ஆதரவை முழுமையாக வென்று வரலாற்றில் இடம் பிடித்துள்ளதை வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலைக் காட்டிலும் பாராளுமன்றத் தேர்தலில் அதிகளவான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார். நான் மாயாஜால வித்தைக்காரரல்லர் என்று ஜனாதிபதி குறிப்பிட்டமை முற்றிலும் பொய்யானது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆதரவைப் பெற்றுள்ள ஜனாதிபதி உண்மையில் மாயாஜால வித்தைக்காரர் என்றே குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஒட்டுமொத்த மக்களின் ஆதரவையும் பெற்று ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளமைக்கு நன்றியும், அரசுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசைக் கைப்பற்றுவற்காக பாராளுமன்றத் தேர்தலில் நாங்கள் போட்டியிடவில்லை. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசு தோற்றம் பெற வேண்டும் என்பதையே தொடர்ந்து வலியுறுத்தினோம்.

இந்த மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை 2025 மார்ச் மாதத்துக்குப் பின்னர் சமர்ப்பிப்பதாக அரசு குறிப்பிட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்டத்தில் இருந்து விலகி பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதா ? அல்லது செயற்றிட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்தி அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதா? என்பதில் ஒன்றை அரசு தீர்மானிக்க வேண்டும்.

உள்ளூாட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்துள்ளது.

நான் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்ததை ஏற்றுக் கொள்கின்றேன். எளிமையான வாழ்க்கையை வாழ்கின்றேன். கிழமையில் இரண்டு நாட்கள் நீதிமன்றத்துக்குச் செல்வேன். மிகுதி நாட்கள் செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் ஈடுபடுவேன் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பாதாள உலகக் குழுவை கட்டுப்படுத்த நடவடிக்கை!

## அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு



கொழும்பு, நவ. 20

**போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக்குழுவை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

**பத்தரமுல்லையில் அமைந்துள்ள அமைச்சில் தனது கடமைகளை அவர் நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார். அதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸ் திணைக்களத்துக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது கட்டாயமானதாகும். அது சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கு அவசியமானது என நான் கருதுகிறேன்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பொறுப்புகளையும் வழங்க வேண்டியுள்ளது.

பொலிஸ் உயர் அதிகாரிகள் நியமனம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு காணப்படுகிறது. நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நாம் செயற்படுவோம்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக்குழுவினரை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம். இந்த விடயத்தில் சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறோம் - என்றார். (அ)

# அமைச்சரவை பேச்சாளராக நளிந்த ஜயதிஸ்ஸ நியமனம்!

கொழும்பு, நவ. 20

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது புதிய அமைச்சரவையின் பேச்சாளராக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக்கப்பட்டார். (அ)

# 23ஆம் திகதி உருவாகிறது புதிய காற்றழுத்த தாழ்வு!

கொழும்பு, நவ. 20

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் எதிர்வரும் 23ஆம் திகதி குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கிலிருந்து வடமேற்கில் நகர்ந்து தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக மாற வாய்ப்பு உள்ளது.

21ஆம் திகதி தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் காற்று சுழற்சி உருவாகக் கூடும்.

மேலும் இது மேற்கு, வடமேற்கு நோக்கி நகர்ந்து அடுத்த 2 நாட்களில் தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கையின் மேல், சப்ரகமுவ, வடக்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இடைக்கிடையே மழை பெய்யக் கூடிய சாத்தியம் நிலவுவதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# பட்டதாரிகள் நிரம்பிய புதிய பாராளுமன்றம்!

கொழும்பு, நவ. 20

தேசிய மக்கள் சக்தியிலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள அமைச்சர்களுள் 15 வைத்தியர்கள், 16 சட்டத்தரணிகள் மற்றும் மூன்று பொறியியலாளர்கள் மற்றும் அதிபார், ஆசிரியர்கள் உள்ளிட்ட சுமார் 50 இற்கும் அதிகமான கல்வியாளர்கள் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி, அதிகளவிலான தொழில் தகுதியுடைய கல்வியாளர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவான முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதேவேளை, நான்கு பேராசிரியர்கள் தேசிய மக்கள் சக்தியிலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளதாக கட்சி தெரிவிக்கின்றது.

ஹினிதும சுனில் செனெவி, சேன நாணயக்கார, சந்தன அபேரத்ன மற்றும் எல். எம் அபேவிக்கிரம அந்த பேராசிரியர்கள் ஆவர்.

மேலும், இராணுவத்தில் ஓய்வு பெற்ற அதிகாரிகள், அரச நிறுவனங்களில் முன்னாள் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பல தொழில் வல்லுநர்கள் தேசிய மக்கள் சக்தியிலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

எவ்வாறாயினும், இம்முறை தெரிவாகியுள்ள பாராளுமன்றம் கல்விமான்களால் நிரம்பியுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது. (அ)

# தேர்தல் பிரசாரச் செலவின விவரத் திரட்டை கையளிக்க வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, நவ. 20

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள், சுயேச்சை குழுக்கள், வேட்பாளர்கள் தங்களது தேர்தல் பிரசாரச் செலவினங்கள் அடங்கிய வருமான செலவின விவரத் திரட்டை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் கையளிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த விவரத் திரட்டைத் தேர்தல் பெறுபேறு வெளியாகி 21 நாட்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டும் எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வேட்பாளர்கள் தாங்கள் போட்டியிட்ட மாவட்டத்தின் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கும், தேசிய பட்டியலில் பெயர் குறிக்கப்பட்ட வேட்பாளர்கள் தமது வருமான செலவின விவரத் திரட்டுக்களைத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திடமும் கையளிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# தேசிய மக்கள் சக்தியின் 43 எம்.பிக்கள் எதிர்க்கட்சி இருக்கைகளில் அமருவர்!

கொழும்பு, நவ. 20

தேசிய மக்கள் சக்தியில் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் 159 பேருக்கு பாராளுமன்றத்தின் ஆளும் கட்சியில் இருக்கைகளை வழங்க முடியாத ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, ஆளும் கட்சியின் 43 உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சியின் பக்கம் இருக்கைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆளும் கட்சியில் 116 உறுப்பினர்களுக்கு மாத்திரமே இருக்கைகள் காணப்படுகின்றன.

எதிர்வரும் 21ஆம் திகதி 10ஆவது பாராளுமன்றம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அன்றைய தினம் தான் விரும்பிய வகையில் பாராளுமன்றத்தில் இருக்கை கொள்ள முடியும்.

எனினும், அதன் பின்னர் சரியான முறையிலான இருக்கைகளை பாராளுமன்றத்தில் தயார்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# யாழ் - சென்னை இடையேயான விமான சேவை இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்ப்பாணம்- சென்னை இடையேயான விமான சேவையை அலியன்ஸ் எயார் விமான சேவை நிறுவனம் இடைநிறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சென்னைக்குத் தினமும் சேவையில் ஈடுபட்டு வந்த இந்திய விமான சேவையான அலியன்ஸ் எயார் நிறுவனமே தனது சேவையை இந்த மாதம் முதல் இடைநிறுத்தியுள்ளது.

இதன் காரணமாக தற்போது யாழ்ப்பாணம்- சென்னைக்கான விமான சேவையை இன்டிக்கோ எயார் நிறுவனம் மட்டுமே நடத்தி வருவதனால், தினமும் இடம்பெற்று வந்த இரு சேவைகள் ஒரு சேவையாக மட்டுமே இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# களுத்துறை விருப்புவாக்கு விவகாரத்தில் சந்தேகம்!

## சர்ச்சையை தோற்றுவிக்கும் ராஜித

கொழும்பு, நவ. 20

களுத்துறை மாவட்டத்தின் விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணும் தீர்மானத்தை எடுக்க உள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியை பிரதிநிதித்துவப் படுத்தி பாராளுமன்றத்துக்கு தெரிவான ரோஹித அபே குணவர்தனவை விட தாம் அதிக விருப்பு வாக்குகளை பெற்றிருக்கவேண்டும் என்ற சந்தேகம் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், பொதுத் தேர்தலின் களுத்துறை மாவட்டத்தின் விருப்பு வாக்கு விவகாரம் தொடர்பில் தனக்கு சந்தேகம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அரசியல் வட்டார தகவல்களின் அடிப்படையில், ராஜித சேனாரத்ன களுத்துறை மாவட்டத்தில் தனது கட்சி ஆதரவாளர்கள் 8000 பேருக்கு வேலை வழங்கியுள்ளதாகவும், வேலை வழங்கியவர்கள் கூட அவருக்கு இந்த பொதுத் தேர்தலில் முன்னுரிமை வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இலங்கையிலிருந்து கடத்தப்பட்ட தங்கம் இந்தியாவில் சிக்கியது!

கொழும்பு, நவ. 20

இலங்கையில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட 4.5 கிலோ தங்கம் இந்தியாவின் இராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிடிபட்டுள்ளது.

இலங்கையில் இருந்து கடல் வழியாகக் கடத்திச் செல்லப்பட்ட தங்கம், இராமேஸ்வரம் வழியாக வாகனம் ஒன்றில் கடத்திச் செல்ல முற்பட்ட சமயமே சிக்கியுள்ளது.

தங்கத்தை கடத்திச் சென்ற இருவரையும் கைது செய்த இந்திய மத்திய அரசின் சுங்கத்துறையின் புலனாய்வு அதிகாரிகள், மீட்கப்பட்ட தங்கத்தையும் கைது செய்தவர்களையும் மதுரைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

பிடிபட்ட தங்கத்தின் பெறுமதி இலங்கை நாணயத்தில் 10 கோடி ரூபா பெறுமதி எனத் தெரிவிக்கப் படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.